வந்திடும் நீர்க் கட்டுக்கு வருகலங் கலடைப்பதுக்கும்.
தந்திடும் நீர்க்குத் தக்க தன பெரிப்பதற்கும்
விந்தமாய் நடு நரம்பில் மிக அவாரங்கள் ஐய்க்குஞ் சாதத
சந்தி ரெத்த நதயி மதார் தமக்கே.

என்றது:- சித்தர் மணக்கம் வேர், சாறடை வேர், கஞ்சாங் கோரை, முருங்கைப் பட்டை எருக்கம் வேர், நீர்வகுவை இது கூட்டிக் கசாயம் வைத்து இறத்துக் கொண்டு அதில் சாற நொச்சில் சாற.4, பிரமிச் சாற.4, சாறபைச் சாற.4, கஞ்சாங் கோரை.4 சிவதை வேர் பலம்.உய, இது இடித்த சாறுடன் கலந்து கடுக்காய் பலம்.ω, கடுகு ரோகணி பலம்.உ, இது கூட்டி அரைத்து கரைத்து வெள்ளைப் பூண்டு பலம்.ரு, ஈர வெங் காயம் பலம்.ரு, கூட்டி முந்தின மருந்துடன் கலந்து இதில் கற்காட்சிங்கி, சுக்கு, திப்பிலி மிளகு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், ஓமம், அரத்தை, பறங்கிப் பட்டை இதுகள் கெந் தகம் பலம்.க, அரிதாரம் பலம்.ரு, நீரடிமுத்து அரைத்துக் கரைத்து விட்டு விளக்கெண் ஆ ழாக்கு விட்டு மெழுகு பதமான வாறே இறத்துக் கொண்டு நக்கவும் வயிற கழியும். அந்தி காலம் வங்க பற்பம் வங்க செந்தூரம் கூட்டவும் நீர்க் கட்டுக் கல்லடைப்பன் தண்டுப் பிளவை மேகரணம், சீப் பிறமேகம், ரத்தப் பிறமேகம், தன பெரிப்பல் சிறுத்து நீரிறங் கல் இது வெல்லாம் தீரும்.

எலும்புருக்கிக்குச்_சந்திர மேகத்_தயிலம்:-

பெற்றிடுங் கீழ் வயத்தில் பெருத்துடன் நிணமுமச்சை
குற்றிடு வயிற ளைந்து கொடிய தோர் எலும்பில்
பத்திரியே சீயும் பாயும் மோரு போல் ரத்தங் காணும்
எத்திடும் எலும்புருக்கிக் கியன்ற சந்திரோதய மேகத் தயிலமாமே.

என்றது:

அத்திப் பட்டை, நாவல் பட்டை, நருவேலிப் பட்டை, ஒதியம் பட்டை, வேப் பிலே இது கூட்டி கசாயம் வைத்து இதில் அதிவிடயம் சுக்கு, சீரகம், அபினி கூட்டி அரைத்து லேகமாக்கிக் கொள்ளவும்.

கால்,_கை சந்து வாதத்துக்கு பிரமகுதி தயிலம்:-

வருகு மோர் கட்டு வாதம் வந்துமே முடங்கு வாதம்
பொருகுமோர் கடுப்பு வாதம் பெருத்திடுஞ் சந்து வீக்கம்
உருத்திடும் உடம்பு நோதல் உண்டான படிக்கதெல்லாம்
பிரமகுர் தயிலமென்று பெருந்திற உரைத்திட்டாரே.

பிரப்பங் கிழங்கு, செங்கத்தாரி, மூக்கதாரி, வேப்பம் பட்டை, சங்கம் வேர், ஆதண்டை, நாய் அளசி வேர் இது கூட்டி கசாயம் வைத்து இறத்து அதிலே நல்லெண்ணை, வேப்பெண்ணை, புங்கெண்ணை இது கூட்டி சுக்கு, திப்பிலி, மிளகு, பறங்கிப் பட்டை, கூட்டி வெள்ளைப் பூண்டு, பலம் அரைத்து கலந்து மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு தினம் அந்தி வெடிஞ்சி உள்ருக்கு கொள்ளவும்.

தாளிச்ச சூரணம்:-

வாதப் பிடிப்பு, சந்து கட்டு, கடுப்பு குரை வாதம் விட்டுப் போகும். தாளிச்ச பத்திரி, திப்பிலி, சுக்கு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், ஓமம், அரத்தை திப்பிலி மூலம், லவங்கப் பத்திரி, கடுக்காய், தாளிக்காய், ஏலம், சிறு நாவல்ப்பூ, கிராம்பு, சாதிக்காய், பேரீச்சம் பழம், முந்திரிப் பழம் இவை கட்டி இடித்து சூரணம் பண்ணி சர்க்கரை தேன், கொம்மட்டி மாதளம் பழச் சாறு விட்டு பிசைந்து கொண்டு அத்துடனே லோக செந்தூரம் கலந்து கொள்ளவும். இருமல், வறட்சி, சுவாச காசம் குணமாம்.

வாய்வுக்கு பஞ்சாரத்தக் சூரணம்:-

திப்பிலி, சுக்கு, மிளகு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், ஓமம், அரத்தை, திப்பிலி, மூலம், கொடுவேலி, கடுக்காய், தாளிக்காய், பொட்டிலுப்பு, கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு இவைகள் கட்டி இடித்துச் சூரணம் பண்ணி களுழாப் பட்டை, பெருங்காயமும் சூரணம் பண்ணி விரகடி பிரமாணம் கொள்ளவும். வாய்வு இரைச்சல், மந்தாக்கினி, பக்கசூலை நோவு மேம்பட்ட வாயுவுகள் எல்லாம் குணமாம்.

பித்த உன்மத்தக்குச் சூரணம்:-

சிவதை வேர், பாலில் சுத்தி பண்ணி பலம்.௫, சுக்கு திப்பிலி, மிளகு கருஞ்சீரகம், நல்ல சீரகம், ஓமம், அரத்தை, திப்பிலி மூலம், கடுக்காய், தாளிக்காய், அஞ்சுப்பு இவை கட்டி இடித்துச் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமணாம் கொள்ளவும். இசிவு பக்க யிசிவு, சூலை எரிவு சூலை, எரிவு இவைகள் குணமாம். இதுக்கு அந்திக் காலத்தில் சுக்கு கசாயம் கொள்ளவும்.

உஷ்ண வாய்வுக்கு கொட்டை சூரணம்:-

திப்பிலி, சுக்கு, மிளகு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், ஓமம், அரத்தை, திப்பிலி மூலம், கொடுவேலி, வட்டத் திருப்பி இவைகள் எல்லாம் வறட்டு இடித்து சூரணம் பண்ணி ஒரு விராகனிடை அபினியும் அரைத்து சூரணத்துடன் கலந்து நன்றாகப் பிசைந்து இரண்டு வேளை வெருகடி பிரமாணம் கொள்ளவும். உஷ்ண வாய்வு, கிரணி, வாதம், கிரஹணி உள் பட்ட வாய்வு, உப்பிசம், பக்க யிசிவு எல்லாம் குணம்.

மாதர் மாலை பயிற்றிய பாண்டுவம் சோகை முதலானதுக்கு அவிழ்தம்:-

அருஞ்பொடி பலம்.௫, காந்தம் பலம்.௫, பழங் கிட்டம் பலம்.௫, இவைகள் கய்யாந்தகரைச் சாறு வார்த்து இரண்டு நாள் அரைத்து பிறகு சுக்கு, திப்பிலி, மிளகு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், ஓமம், அரத்தை இடித்து சூரணம் கையாந்தகரை சாறு சூரணி கலந்து அரைத்துச் சூரிய புடம் எலுமிச்சம் பழம் சாறு வார்த்து அரைத்து கலந்து தினம் வெருகடிப் பிரமாணம் கொள்ள சோகை முதலானது, பாண்டுவம், காமாலை, ஊது காமாலை, அறத் காமாலை எல்லாம் குணமாம்

ஒட்டியப் புண், ஜமத்தை பறங்கிப் புண் முதலாகிய அதக்கு அவிழ்தம்:-

பறங்கிப் பட்டை பலம்.௫, சுக்கு, திப்பிலி, மிளகு, கருஞ்சீரகம் நல்ல சீரகம் இவை கட்டி இடித்துச் சூரணம் பண்ணி உரலில் இட்டு வெற்றிலை போட்டு இடிக்கவும். பின்பு ரசம் சுத்தி பண்ணினது இரண்டு விராகனிடை விட்டு ஒரு சாமம் இடிக்கவும். குப்பமேனிச் சாறு, துளசிச் சாறு விட்டு இடித்து உருண்டையாக்கிக் கொள்ளவும். ஒன்பது வகைப் புண்ணும், செவ்வட்டை சேயன் கடியும் தீரும்.

சூலைக் கட்டுக்கு மருந்து:-

சாதிலிங்கம், ரசம், கெந்தகம் இவை கட்டி பறங்கிப் பட்டை பலம்

சுக்கு பலம்.உ, இது உரலில் விட்டு நாறு வெத்திலை போட்டு ஒரு சாமம் இடிக்க கொடுக்கவும். உப்பு, புளிப்பு, கசப்புத் தவிர்க்கவும். குலைக் கட்டு, கால் முடக்கல் கை முடக்கல் வே---ப பரம் உண்டான தெல்லாம் சுகமாம்.

பெரு வயலுக்கும் வல்லை நமைக்கும் நவரோகத் தயிலம்:- _

பெருந் தும்மட்டிச் சாறு நாழி, பிரமிப் பூண்டுச் சாறு நாழி, சிவதை வேர், சாறு நாழி, கப்ப மேனிச் சாறு நாழி, சாறடைச் சாறு நாழி, நொச்சிலிச் சாறு நாழி, இதுகள் கூட்டி விளக்கெண்ணெய் இருநாழி விட்டு திப்பிலி, சுக்கு, மிளகு, வெள்ளைப் பூண்டு இடித்துக் கூட விட்டு ஈர வெங்காயம் இடித்துச் சாறு விட்டு எண்ணெயில் கலந்து கல் லுப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, இந்தப்பு கூட்டித் தயிலமாக்கிக் கொள்ளவும். மகோதரம், உதர வெப்பு வல்லை நமைவை போம்.

மூல வாயுவுக்குச் சூரணம்:-

கட்டுக் காறணை, புளியறணை, பிரண்டை, கறணைக் கிழங்கு, காந்க் கொட்டிக் கிழங்கு, நாயுருவி சமூலமும் கூட்டி அத்துடனே சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டித் தேனில் கொள் ளவும்.

மூளை மூலத்துக்கு மருந்து:-

கெவுரி குலைப் பாலிலரைத்து முளையில் மூன்று நாள் போட்டு நாலா நாள் தயிருஞ் சோறுங் கூட்டவும். உள்ள மூலம், பிறமூலம், ஆணி மூலம் இதுகளுக்கெல்லாம் இப்படி ச் செய்யவும். உள்ருக்கு பிறண்டை வேரும், நாயுருவியும் கூட்டி சுக்கு, மிளகு, சீரகம், ஒவ்வொரு பலம் கூட்டி சூரணம் பண்ணிக் கொடுக்கவும். பசுவின் நெய்யில் கொடுக்கவும். மூல வியாதியெல்லாம் பாசுத்தம்.

மூலக் கிருமிக்கு அதிவிடையமா மாத்திரை:-

அதிவிடையம் பலம்.க, சுக்கு பலம்.க, சீரகம் பலம்.க, அபினி பலம்.ரு, வட்டத் திருப்பி கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து பிறகு கஞ்சா இலை கசாயம் கருவேப்பிலை கசாயம் வைத்து அரைத்து தேத்தான் கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி பஞ்ச மூலம் கூட்டி கருவேப்பிலை காரை வேர், வெள்ளைப் புலா வேர், கூட்டி கசாயம் வைத்து அத்துடனே கொடுக்கத் தீரும். பதினெட்டுக்**கு**

பதினெட்டுக் குட்டங் கடிக்குத் தயிலம்:-

சிவனார் வேம்பு, எருக்கம் வேர், சதிரக் கள்ளி, கொடிக் கள்ளி, இலைக் கள்ளிப் பட்டையும் விரமிளா--கருணை வேர், நாய்த் துளசி, அலிஞ்சி வேர், கொடுவேலி வேர், செங்கத்தாரி வேர், முக்கத்தாரி, வேளா வேர், எட்டி கொட்டை இதுகளெல் லாம் நருக்கி உதறிப் பானையில் அடைத்து குழி பறித்து அந்தக் குழியிலே ஒரு பல்லா வைத்து பானையின் மேலே ஒரு சட்டி மூடி நடுச் சட்டியிலே நீர் விட்டு பானைச் சட்டி கவுத்து மூடர சமயம் எருமுட்டையுஞ் சத்தி விட்டு மேல் வைக்கல் போட்டு மெழுக்கிட்டு நெருப்புதி முப்பசும் வெந்த பிறகு மற்ற நாள் மேல் பானை எடுத்துப் போட்டு கீழ்ப் பல்லாகையில் விழுந்த தயிலம் எடுத்துக் கொண்டு அந்த தயிலத்துடனே கெந்தகம் அரிதார பற்பம் கூட்டிக் கொண்டு மேலுக்கும் பூசவும். பதினெட்டு குட்டமும் சில்லறக் கடியன் முதலானதுஞ் சுகமாம்.

அண்ட வாதம், குடல் வாதத்துக்கும் தயிலம்:-

கொட்டைக் கிழங்கு, சாறடைக் கிழங்கு, சத்தி சாறடைக் கிழங்கு, ஆற்றுத் தும்மட்டிக்காய், உள்ச் சோறு நாழி, வெள்ளைப் பண்டு, வசம்பு, வெங்காயம் சாறு நாழி கூட்டி எல்லாம் இடித்து சீரகம் சுக்கு கூட்டி விளக்கெண்ணெயில் ஆக்கி கொள்ள பஞ்சக் குன்மம் வயிர பிசுவு, அண்ட வாதம், வலி வாதம், விரை வாதம் சுகமாம்.

கண்ட மாலைக்கு மருந்து:-

ரச பற்பம் உள்ருக்குக் கொடுத்துப் பிறகு பசுவின் நெய் நாழி அத்துடனே பறங்கிப் பட்டை, சீரகம், அரத்தை, ஆடு தின்னாப் பாளை வேர் இது கூட்டி இடித்து பசுவின் நெய்யில் கலந்து காய்ச்சித் தின மாளம் உறக்கு கொள்ளவும். சில ரணத்தின் மேலே புண்ணுக்கு பாஷாணம் போடவும். அசன பவுத்திரம் கண்ட மாலை குணமாம்.

கால், கை எரிவு, உடம்பெல்லாம் எரி வாதத்திற்கு:-

அரிதாரம் நாபி சாதிலிங்கம், சீரகம், கிராம்பு, திப்பிலி, மிளகு சுக்கு, கடுக்காய்இ இது கூட்டி துளசிச் சாறு நொச்சில் சாறு பாகலைச் தீ சாறு, சுக்கு நீர வார்த்தரைத்து அவரைப் பிரமாணம் உருண்டை பண்ணி அந்தி காலம் இரண்டு உருண்டை வெற்றிலையில் வைத்து தின்னவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். உடம்பெரிபு தலை குடைச்சல் வாதம் குணமாம் .

சன்னி யுஷ்ணக்கு அமுர்த ரசம்:-

ரச பற்பம் பலம்.ரு, கெந்தகம் பலம்.ரு, சாதிலிங்கம் பலம்.ரு; அரிதாரம் பலம்.ரு, நாபி பலம்.வ, மனோசிலை பலம்.வ, கெந்தகம் பலம்.வ, லோகம் பலம்.வ, கசூசி வங்க பற்பம் பலம்,வ தத்திருக பற்பம் பலம்.வ, சுக்கு, திப்பிலி, மிளகு, வெண்காரம், படிக்காரம் கூட்டி துளசிச் சாறு கைய்யாந்தகரைச் சாறு இதுகளில் ஒவ்வொரு நாள் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி பஞ்ச கோலத்தில் இஞ்சி சாற்றிலிட சன்னி.யஷ, வாதம், குசகா சன்னி தோஷ முதலாய்க் குணமாம்.

பெரு வியாதி குட்டத்துக்குத் தயிலம்:- _ _ _

அலிஞ்சில் வேர், மாவிலிங்கம் வேர், எருக்கம் வேர், சதிரக் கள்ளி வேர், விளா வேர், குற்ற கரச்சம் மட்டி வேர், சிவனார் வேம்பு, சமூலம் வெப்பம் பட்டை, களாருமா வேரு, அவுரி வேர், செங்கத்தாரி வேர், மூக்க தாரி வேர், சிறு வேளாம் பிரம்பு, மிளகறணை, வேர், கொடுவேலி வேர், இதுகள் கூட்டி நசுக்கி உலத்தி பானையிலடைத்து மேல் சட்டி மூடி சட்டியில் சிருவி ட்டு குழி பறித்து குழியில் பல்லாவைத்து அதில் கவுத்து குத்து மண் அணைத்து எரு முட்டை போட்டு அதின் மேலே வைக்கல் போட்டு தீ போட்டுக் காலமே எடுத்துப் பார்க்க தயிலம் உழக்கில் விழுந்து இருக்கும். அந்தத் தயிலம் எடுத்துக் கொண்டு அந்தத் தயிலத்துடனே ஒரு பலம், கெந்தகம், சாதிலிங்கம் பலம்.க, கலந்து நீர் வெட்டி பருப்பு மூத்து அரைத்துக் கலந்து கொள்ளவும். மேலுக்குத் தடவவும். சொறி, குட்டம்.யஅருணிமம், உப்பிலா பத்தியம் பிடிக்கவும். நாற்பத் தெட்டு நாள் ஒரு மண்டலம் கொள்ளவும். சகலகடியரும் குணமாம்.

சன்னி யுஷ்ணக்கு, சுரம் யஷ்ணக்கு, வாதம் அயசனக்கு, தோஷம் க்கு அதிரிடிசக்கு சேஷயம் க்கு இதுக்கு:-

மகாவச்சிராதி, ரச கற்பம், தாம்பர பற்பம், அரிதார பற்பம், நாக பற்பம், லோக பற்பம், வெள்ளி பற்பம், கந்த பற்பம், வெண் கல பற்பம் வகை ஒன்றுக்கு பலம்.ரு, சாதிலிங்கம் பலம்.க, மனோசிலை பலம்.க, கெந்தகம் பலம்.க, நாபி பலம்.ரு, அரிதாரம் பலம்.க, இருடி பலம்.ரு, குதிரை பல்லன் பலம்.ரு, ஊமத்தை முத்தல் விரை பலம்.ரு இது கூட்டி திரிகடுகு வெண்காரம் இது கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்து ஒரு நாள் அரைக்கவும் குப்ப மேனிச் சாறு, துளசி சாறு, கைய்யாந்தகரைச் சாறு, செருப்படைச் சாறு இது உருண்டை பண்ணி காமுகறத்துடனே கொடுக்கவும். சன்னி பாதம், சுரம், அ அத்தி சுர வாதம், பித்தம், சுரம், வாத சேற்றும சுரம், அத்தி சேத்தறி

சுரம், மாந்த சுரம், அசீரண சுரம், சுத்திர வாய்வு, நித்திராங்க வாத சுரம் இதுகள் மற்று முண்டான தொந்த சுரமெல்லாந் தீரும். இது மகா புசி யென்று பேர். திரிலோக்கிய சிந்தாமணி யென்றும் பேர், மகா சஞ்சீவி என்றும் பேர், சத்திய பிரமாணம்.

குட்டம் பதினெட்டுக்கு மருந்து :-

ரசம் விராகனிடை.உ, கெந்தகம் விராகனிடை.உ, சாதிலிங்கம் விராகனிடை.உ அரிதாரம் விராகனிடை.உ கூட்டி கருப்பு நெல்லரிசி, சாந்து ஒரு படி கூட்டி உரலிட்டு வெத்திலை.உ, குப்ப மேனி சீசி பாலை இதுகள் சாறு விட்டு ஆறு நாள் இடித்து கேத்தாங் கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி அந்திக்கு பத்து விடியப் பத்து இப்படிக் கொள்ள பல்லிலே தட்டாமல் முழுங்கவும். வெண் குட்டம் தீயிர் இதுகளெல்லாம் குணமாம்.

எலி கடி :-

வங்கெலி, ஊங்கெலி, இரைப்பு எலி, சுண்டெலி, ஆசதி எலி.

இதுக்கு மருந்து :-

அரிதாரம் பலம்.ரு, கெந்தகம் பலம்.ரு இது கூட்டித் நவச்சி முருங்கைப் பட்டை கொடுவேலி, மாவிலிங்கம் வேர், காட்டுக் கருணை சத்திக் கிழங்கு இது கூட்டி விளக்கெணணை கலந்து ஈர வெக்ரயம் வெள்ளைப் பண்டு வசம்பு கூட்டி எரித்து ஒரு காசிடை இரண்டு வேளையும் இது கொள்ளவும். வீங்கெலி, ஊங்கெலி, பிணை எலி, சுண்டெலி, காணக்கடி மற்றுள்ள கடிகளெல்லாம் குணமாம். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ஒலைகள் சுரம் பிறக்கும் வகை விடப்பட்டது.

இருமலுக்கு வெள்ளை கண்ட மேகத்துக்கு :-

கையாந்தகரை, நாயுருவி, கருந்தாளிங்கு, ஊதவேளை, மெய்யா மெரக்கு மெட்டு ரெண்டு வேலிப் பரத்தி யிலை நாலு, நொய்யா மரிசி திரிகடுகு நொறுங்க வரைத்துச் சுட்ட அடை கையால் புட்டுத் தின்பீராய் கணைக்கப் பெண்டான்டீ இவ்பூறல் தாறுமா வல் மியலாம் அரிசி கூட்டி அன்பசா ந் திரிகடுகு கூட்டி அரைத்து மிக வரு பொடி யிருமல் போமே.

3. கொடிக் கழல் இலைச் சாறு குமு கொண்டிலைச் சாறு
கடித்திடு உழக்குச் சாறு பற்றியே பிழிந்து கொண்டு
இடித்திடு மேலஞ் சுக்கு விடு மிள கூட்டி
குடித்திடப் போகும் நல்ல கோவில மேகம் போமே.

4. கல்லது அடைப்பல் போகும் கண்டி தன்டேரித்தில் வல்லதோர் நீரடைப்பன் மற்றுள்ள தன்டில் நோதல்
உல்லமாம் பலனத்தின் கீழ் ஒழிந்திடுஞ் சீயள் வாழும் வல்லபம் வேண்டாமிந்த வரு கழற் சாறு கொள்ளே.

ருத்திரேணி சுமைக்க புளியம் பறணி விங்கல்லுப்பும் இது மூன்றுங் கூட்டி ஒரு காவிலே நாயுருவி புளியம் பறணி உப்பு அடுக்கடுக்காய் வைத்துக் கொளுத்தி விட்டால் அது பர்பமாம். உப்பும், பளபளப்பு அடங்கின பிறகு கடை திரவியம் திரிகடுகு பலம் ஒமம் பலம்.4, இது காய வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி மூன்று சாம்பலும் கூட்டி வெருகடிப் பிரமாணம் கொள்ளுறது. இச்சா பத்தியம்.

நாசிகா பறணத்துக்கு செய்யும் முறை :-

வெண்மை பொருந்தின முட்டைச் சாம்பலிலே எருக்கம் பாலூட்டிக் காய வைத்து வஸ்திர காயம் பண்ணி மெல்லிய சீலையில் அரித்து சிமிளிலாவது எடுத்து அடைச்சு வைத்துக் கொள்ளவும். இதுவுமது :-

நாகு வருஷத்திய இலுப்பைக் கட்டி நரைப பலங் கல்வத்திலிட்டு அரைக்க அவல் பிறந்து வெண்மையாம். அது நாக்கு, அக்கிரஞ்ச் சால சயித்தியம், சலதோஷம் ஒருத் தலைவலி, கோழையும் விட்டோடும்.

ஏரிகுன்மத்துக்குத் தேங்காய் கடுகு:

1. சுக்கு சீரகம் தயர்தோர் திப்பிலி, தக்கு மொர் ஒமந் தாகு மது வெந்தயம்
ஒக்குமே தேங்காயுள்ளது தாவடை, ஆக்குமே சாணி அதின் மேலே தப்பிடே.
2. ஆகவுமே சாணி அதின் மேலோருமே, கடமென கன கய்யாந்தகரைச் சாரை லே கமாய்
நடமகாயும் கொள்ள நாடாது குன்மங்கள் அடைவுடன் கொண்டவர் காரம ரோகமே.
குல்மமீ சத்தி குன்மம், குலே எரிவுந் தீரும்.

விரோசனம் புன்னும்படி:-

சீந்தில் தண்டு, களிப் பாக்கு, சிரவகை, வெருங்கடுக்காயும், காய்ந்த சுக்கும், ரேசனி யுசு காயா நீரில் கலந்திடுக் காச்சிக் கொள்ள மாந்தமான சுரந் தீரும். வயிறங் கழியும் கண்டீரே.

2. சிந்திடுங் கடுக்காய் தாறும் செறிந்த சாறடைக் கிழங்கு
சாய்ந்திடுங் கசாயங் காய்ச்சி கடுகியே யிடித்துக் கொள்ளப்
பாய்ந்திடும் மல வாம்வு பசியிலாதேப்பந் தாழும்
தேய்ந்திடும் விரேசனத்தின் செயலது கண்டிலிரே.
மருந்திட்டு மாரக கட வாந்தி கொடுக்கத் தீரும்.

1. கஞ்சாங் கோரை சுடுக்காயும் படிய நொச்சில் இலை தாழும்
விஞ்சாங் கடுகுரேசனியும் மெத்தக் காய்ச்சிக் குடிப்பீராய்
அஞ்சாச் சுரங்கள் உப்பிசங்கள் அழுக்காய் வயிற்றில் கட்டுவதும்
பஞசாய் பிறக்கும் பித்த சுரம் பறக்குங் கண்டீர் பாருமிதே.
2. குப்ப மேனிச் சாறுமக்கு கொள்ளும் வெள்ளுள்ளி எருக்கம் வேர்
அப்ப மிகவே தானரைத்து அத்தை எடுத்துக் குடிப்பீராய்
தப்புக் கோழை மார்க் கட்டுச் சொல்லா ரிரைப்பும் போமதுவே
பொருக்கு மதுவே உரைத்தோங் கேள் உலகத்தோரே யிது பாரே.

மருந்தீடுக்கு:-

3. வச்சுதோர் எலுமிச்சங்காய் வகுத்ததுவே அரிசி முட்டி
வச்சு மேனி பனியில் தாழும் வாறது எடுத்துக் கொண்டு
பச்சென வுள்ளே கொள்ள வாந்தி பிறந்தி யாகுந்
தச்சதோர் மருந்தீட்டுள்ள தானது ஓடிப் போமே.
இது மருந்தீடு பித்த முதலாவது குணமாம். அறி

அறிவழிந்த பித்தத்துக்கு:-

1. கருங்கோழி பிச்சிலங்குச் சுடிய தோர் மிளகு சுக்கும்
பெருவ காயந் திப்பிலியுஞ் சுட்டிப் பெய்திடு மூலைப் பாலூட்டி
ஒருங்காத நசியஞ் செய்யுமோ ரெட்டு நாள் மட்டாக
இருங் காலும் நேர்பாளத்தின் எய்திடும் விரைய மென்ரே.
2. நஞ்சறப் பறிச்சாங் கொண்டு நாருமே வாந்தி செய்வி
வஞ்சியே எலுமிச்சாறு மேது மேது வலையாலாட்டி
அஞ்சேறும் பாஷாணத்தை அற உச்சி தீறித் தேயே.

3. பேப்ப் பீக்கம் விரையுங் கூடும் மெய்ந்த இடித்து அளாய்
வாயத்தி கடுகு கூட்டி வசமதாயரைத்தே உருண்டை
பாய்த்திடும் நிழலத்திப் பற்றியே நசியம் பண்ண
சாய்த்திடு மறிவழிந்த தக்கதோர் பித்தம் போமே.
4. சமுத்திராப் பழமும் நொச்சில் சாற்றினில் அரைத்துக் கூட்டி
நிமத்திடு மூக்கில் மூன்றி நேர் படக் கலிக்கம் செய்தால்
பிறமித் திடும் பித்தம் பேசா பெருந் பித்தம் ஓடிப் போகும்.
மிதத்திடு மூலையிலே கொண்ட நோயாறு மென்றே.

பேய் நாய் நரி கடிக்கு மருந்து:-

நல்ல தோல் சுட்டு நலமுடன் ரசமும் நாபி
வல்லது கெந்தகங்கள் வந்திடுஞ் சாதிலிங்கம்
அல்லது அரிதாரங்கள் அற்நடன் திரவிட்ங்கள்.

திரிகடுகுடனே பாஷம் தேனும் வார்த்ததரைத்துக் கொண்டு
அரிவதாம் மனலங் கொள அத்தி கடியும் போகும்
குறியதாம் பத்தியங்கள் கேளு உப்பில்லாய் தன்றே.

பேய், நரி கடிச்ச வாயில் நல்லெண்ணெ கரண்டியில் வார்த்து ஒரு விராகனிடை ரசமும் விட்டு நெருப்பில் காய்ச்சி வாயில் விடவும்.

வாய்வுக்குச் சூரணம்:-

திப்பிலி, மிளகு, சுக்கு, கருஞ்சீரகம், ஓமம், அரத்தை, திப்பிலி மூலம், கொடு வேலி, கடுக்காய், தானிக்காய், முருங்கைப் பட்டை, கஸ்தூரிமஞ்சள் பட்டை, மிளகரணைப் பட்டை ஆக தவளே இது சுட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணி வெரு கடிப் பிரமாணம் கொள்ளவும். உஷ்ண வாய்வு, செரியாக் குணம், பக்க பிசிவு குன்மக் குடாலி, நெஞ் செரிப்பு இது முதலாகிய வாய்வுள்ளதெல்லாம் தீரும். அரக்கீரை துவரைப் பருப்பு கூட்டவும் புளிப்பு தவிர்க்கவும்.

குன்மத்துக்கு வடவாக்கினிச் சூரணம்:-

நாயுருவி, புளியம் பறணி, எள்ளுச் சக்கை, கள்ளிச் சருகு, நீர் முள்ளி, எருக்கு இது வெவ்வேறே சுட்ட சாம்பல் சமன் கூட்டி பன்னீரிலே ஊறப் போட்டு முப்பது நாழி ஊற விட்டு முத்துப் போலே தெளிய விட்டு இறுத்துக் கொண்டு சுண்டக்காச்சினல் அதிலிட உப்பு, பாண்டமிலே பிடிக்கும். அந்த உப்பை எடுத்துக் கொண்டு அதுடனே ஓமம் பலம். உ சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், நல்ல சீரகம் இது கூட்டி சூரணம் பண்ணிக் கொண்டு உள்ளுக்குக் கொள்ளவும். குன்ம வாய்வு, பஞ்ச குன்ம நவை வலி சூலை மகோதரம், உதர வெப்பு பக்க பிசிவு முதலாகியது குணமாம். இச்சா பத்தியம்.

பிறலாப சன்னி குணம்:-

பொல்லது சொல்லும் பேய் போலெழுந்திருக்கும்
கொல்லாது கொல்லுங் கொடுங் கோபம்
நில்லாக கங்குல் வருஞ் சுரமுங் கலக்கற வெப்புண்டு
பொங்கும் பிறலாப சன்னி பேர்.

இதுக்கு:- சிறுதேக்கு, நிலவேம்பு, காஞ்சொறி, வழுதலை, முத்தக்காசு, பொன் முசுட்டை, சிறுகாஞ்சொறி கஷாயம் வைக்கவும்.

கண் குழி சன்னி:- வெண்பா:-

கண்ணைச் சுருக்கும் கனக்க சுரமுண்டாம்
பண்ணை குளிரி மிகப் பல்லிறுகும்
உண்ணும் அன்னமுடனுறக்கமா கார மில்லாமல்
பண்ணு மிந்தக் கண்குழியா பாரு.

இதுக்கு மருந்து:-

பற்படாகம், கார் சிராம்பு, கார்போகரிசி, கடுகுரோகணி, கையாந்தகரை சுண்டங்கத்திரி, தோமல்லி, பேய்புடல், சமன் கொண்டு உழக்காய்க் காய்ச்சி கொடுக்கவும். கொள்ளு, பயறு, துவரை வெந்நீர், மிளகு வெந்நீர் பண்ணி ஒரு பிடி சோறு ஒரு நேரங் கொடுக்கவும்.

பத்தியம்: **அந்திர சன்னி:-**

உடல் வெதுப்பு மாறுகு மலம் நெருந்திருக்குங் சடுத்து முகை நெளிக்குங் கண் கரிக்கும்

அடலை படுக்காத் தலை வலிக்கு மரந் மந்நில் சேந்தமழுங் கூட.

இதக்கு_அவிட்டதம்:-

சூடாதோடை, திரவளே, முள்ளி வேர்; இலுப்பைப் பூ பற்படாகம், சிற்று முட்டி, அம்மையார், கூந்தல், சக்கு, திப்பிலி, நல்ல சீரகம், கொத்தமல்லி வில்வ வேர், பேய்ப் புடல், கடுகுரோகணி இவை யெல்லாஞ் சமன் கொண்டு படி தண்ணீர் வார்த்த உழக்காக காய்ச்சி தேன் வார்த்துக் கொடுக்கவும்.

பத்தியம்:- திணையரிசி, கொள்ளு, கல்ரை மூன்றும் ஒவ்வொரு பிடி கட்டி சீலையில் முடிச்சுப் போட்டுக் காய்ச்சி வந்தவுடனே முடிச்சை எடுத்துப் போட்டு தண்ணீரைக் கொடுக்கவும். இப்படி ஏழு நாள் கொடுக்கவும்.

சீத_சன்னியின்_குணம்_அவிட்டதம்:-

காலுங் கையும் உடல் ஆவும் வந்தி விக்கலிடும் அழலை தாகம் மல யிறகல்
வேலை குளும் உலகத்தில் விதித்தால் புலவோர் மெய்யென்றே நாளு மிருபத்தஞ்
சென்றே நாடுஞ் சீத சன்னியிதே.

இனி_அவிழ்தம்:-

கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, சுக்கு, விராம்பு, விசிர மிச்சம் வேர், பூசணித் தண்டு, கரைத் தண்டு, ஊ அவளே வேர், சந்தனப் பொடி இவை சமனகக் கட்டி இடித்துக் சூரணம் வைத்த உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். பத்தியம் கொள்ளு, பயறு, அவரை வெந்த நீர், தண்ணீர் இரத்த மிளகு, சீரகம் காய்ச்சி, ஒரு பிடி சோறு காரமாய்க் கொடுக்கவும்.

அந்திர_சன்னி:-

சற்றே ஈங்கு மழித்திடும் சற்றே அறிவு தாகும்
மேற்றே வுடலுஞ் சுரங்காவும் மிகவே கை கால் நிலம் புறண்டும்
உற்ற நாவுங் காகான உடலைச் சொறியும் நீரழியும்
குத்தமான அந்திரத்தின் குறி யித்தவையுங் கேளீரே.

இதக்கு_அவிழ்தம்:-

கடுக்காய், சிறுதேக்கு, இருவேலித் தண்டு, விலாமிச்சம் வேர், பற்படாகம் சுக்கு உழக்காய்க் காய்ச்சி அதிலே பலவிடை கோரோசனையும் முலைப் பாலுங் கலந்து கொடுக்கவும். பத்தியம் கொள்ளு, அவரை, வெந்த தண்ணீரில் மிளகு நீர் பண்ணி ஒரு பிடி சோறு போட்டு ஒரு நேரங் கொடுக்கவும்.

அரம_சன்னி:-

புசடு நலிக்கு நீரு மலத் கட்டுத்துக் காணும் பலங் குறையுங், கால் கரமுங் குருந்த போரு திசம் போல எழுந்திருப்பன் அலறி விழுவன் கிறகிறென்றே தலை சுழற்றிப் பிரட்டிக் காணும் வகி போல் இரு புறமும் மசித்துக் கொண்டு மன தன்றுலே பனமா யாகாசமாகும் வசமான இளை முலையீர் மானே கேளீர் அரமலிக சன்னி யென்றே அறியுமாறே.

இதக்கு_அவிழ்தம்:-

பெருவ்வை வேரு, முள்ளை பாதிரி வேரு, குமுள்ளா வேர், காட்டு மல்லிகை வேரு, பிடாரத்தி வேரு, வில்வ வேரு, நன்னாரி வேரு, சிற நொச்சி வேரு, கண்டங் கத்திரி வேர், ஒவ்வொன்றுக்கு சமம் வேரு கட்டி இரு நாழி தண்ணீர் வார்த்து உழக்கா காய்ச்சி இஞ்சிச் சாறு விட்டு கலந்து அந்தி சந்தி இரண்டு வேளைக்கும் கொடுக்கவும்.

கண்டகு_சன்னி:-

கண்டகு சன்னி புடல் புிஞ்சம் கடுக்குஞ் சுரமும் மிகக் காணும்.

உண்ட நீருந் தகாத உழள்ற மெலியும் நாவரண்டு
மீண்டி யெழுந்த தலை பிரட்டி மிகவே நித்திரை வாராத
வண்டார் மாமயிலே வரு கண்டரு சன்னியு மிதுவாமே.

இதற்கு அவிழ்தம்:-

சுக்கு, தேவதாரம், கடுகுரோகனி, வெள்ளரி இவை சமன் கட்டி இடித்த இரு நாழி தண்ணீர் விட்டு உழக்கா காய்ச்சி அதில் இஞ்சிச் சாறம் கூட்டி அந்தி, சந்தி ஒரு நாள் கொடுக்கவும்.

சார சன்னியும் அதற்கு அவிழ்தமும்:-

அழித்திடுயே சுரமுங் காயும் முற்றிப் பேதியாகும்
அழித்திடும் வாயுங் காயும் அடிக்கடி வி---பக்கம்--
சுழித்திடும் கால் கை ஓயும் சுக்கியே காயம் வத்தும்
அழுத்திடுயே பேச்சு பேசும் அதிசார சன்னிய காயமே.

இதற்கு அவிழ்தம்:-

நொச்சியிலை, புசனித் தண்டு, பற்படாகம், நிலவேம்பு, போரமுட்டி வேர், சுக்கு, திப்பிலி, ஏலம் வகை.க நறுக்கி இரு நாழி நீரில் போட்டு உழக்காக காய்ச்சி வடித்துக் கொடுக்கவும். பத்தியம் கொள்ளும், பயறு, அவரை இது மூன்றும் போட்டு வேக வைத்த இறுத்த முளநீர் பண்ணி அந்த முளநீரிலே ஒரு படி கொள்ளவும்.

அசுர பேத சன்னிக்கு:-

காயமும் வேத்திடாத கடுங் கருமூக்கிச் காதும்
ஓயுமே கை கால் மெத்த உண்டியும் வெறுக் கொடாத
மாயம் போறுடிம்பிளைக்கும் மடிக்கடி தாகமுண்டாம்
ஆய்ந்த நா ம புலவோர் சொன்ன அசுரல் பேத சன்னியாமே.

இதற்கு அவிழ்தம்:

மஞ்சாடி, கடுகுரோகனி, மாறமஞ்சி, வசுவாசி, செண்பக அரும்பு, கோஷ்டம், கொத்தமல்லி, கழச் கட்டிப் பருப்பு, பற்படாகம், செங்கழுநீர் வகைக்கு கட்டி ஒரு படி தண்ணீர் வார்த்த உழக்காக காய்ச்சி அதிலே இஞ்சிச் சாறு வார்த்துத் திப்பிலி பொடி போட்டு கொடுக்கவும். ௩ நாள் கொள்ளு, அவரை வேக வைத்த தண்ணீர் முளநீர் பண்ணி ஒரு படி, சோறு போட்டு கொடுக்கவும்.

தந்திரிக சன்னி:-

அமங்கலே சுளையதாகும் அயர்ந்த தாகமுண்டாம்
நடமாடு ஏகத் சிவக்கு தயங்கு கை கால் மெத்த
உடல் மிகக் குடைந்த கட்டு உற்றிடு மயக்க முண்டாம்
மடந்தை கேள் தாந்தரிக சன்னிலை உத்தவாரே.

இதற்கு அவிழ்தம்:-

சீந்தில், பேய்புடல், விலாமிச்சி வேர், பற்படாகம், சுக்கு, திப்பிலி, கடுகு ரோகனி, காட்டு மல்லி வேர், பிடாத்தி வேர், வசம்பு இவை சமன் கட்டி நறுக்கி நாழி நீரில் போட்டு உழக்காக காய்ச்சி அந்தி, சந்தி கொடுக்கவும். இதக்குப் பத்தியம் கொள்ளு, பயறு வேக வைத்த தண்ணீரில் மிளகு, நீர் காய்ச்சி ஒரு படி சோறு போட்டு ஒரு போத கொடுக்கவும்.

சன்னி அகவல்:-

பன்னியர் பத்தந் தான் பொய் சொல் வேறு, அன்னியமாம் பிறலாங் கண் குழி அந்திர ச்தரம், மந்திர சன்னியும் அற பலி கண்டு அதிசாரம் கூடன், திரமாம்

சுவபேத சன்னியும் தந்திரிக சன்னியும் பிறலாப சன்னி கண் குழி சன்னி, அந்திரி சன்னி, சீத சன்னி, அந்திர சன்னி, அறமலி சன்னி, கண்டகுச் சன்னி, அதிருசன்னி, அசுவபேத சன்னி, தம்பிரி சன்னி இப்பட் கொண்டு நன்னியிலோடு செல்லே.

முதலு நாம்சரக் பஞ்சம்படி குலில் :-

சீரான சீரகமும் செங்குழநீர் கொடி நீர்-போறன திப்பிலி பேரிச்சம் பழம்-நேரான திரிகடுகுந் திரிபாலையு-சீர் நாகப்பு வேலம் கறியுறைந்த மென்றுக் கச்சோலம்-அறியிக சாதிக்கா பிந்தப்பு கொத்தமல்லி மமஞ் குரேசானி-உந்ற கந்காட்கசிங்கி கவுடு பறங்கியுடன் வறதிலவங்கம் வகை மூன்றும் நிக்க சலவை மிளகு சமுத்திரச் சோகி விரை நவமான முந்திரிச் புளம் பழம் திலே வாழை சீந்தில் சர்க்கரை கந்சல கன் சநவட நீர்முள்ளி-விரிஞ்ச சர் முள்ளிலவம் பிசின் மொட்டும்-இருவேலி வள்ளச்சை லேதி மன பூசனிக் கிழங்குவும் அமுக்கிற ஆடாதோடை இலை-குழப் பூனைக் காய் மந்திரு போதக் கசகசா விந்து வகைக்கு பலமரையே சேர்த்திடித்த இது கதிப் புரச்சி நல்ல சடைக் கொர்க்கம் நம்புமாய்ச் சொல்லக் கேள் அடவுடன் சர்க்கரை கொள்ளுற பாதி திடமான அப்பிரக செந்நூரம் அதிக வன்ன லெக்கம் செப்பமுடன் மடங்க நெர்நாரமுடன் ஒப்பதாய் தேன் மிக கூட்டி முருக்கம் பூப் போலான தேனுடனே தான் பிசைந்த சிக்கெனவே, இலந்தைப் பழமளவு எளிமையதுவே கொள்ளக் கலந்த தொரு.காமக் குளக் கேரும் அருக்கருந்த வீரிய விந்தியாம் மெய்யுட் குத்தம் பனியாம் நாரி யரைச் செயிக்கும் நல்லதி மாரியாம் வாலிபப் பெண் எல்லவர்க்கு மிம் மருந்த எடுத்தக் கொம்பிராய் சென புஷ்டியாம் நல்ல கிபலமாம் நல்ல சுவாச காசம் போம் சிலேஷ்டமும் போம் விக்கல் க்ஷயம் போம், சன்னி விரை வாதம் போம் கச சர்வ ரோகம் போம் மேதினி பியமில் லேப் பார மங்கிடமும்மே பொசிக்குத் திதியானந்தா சொன்ன சொல் வேற.

பனிரெண்டு வகைப் பிளிசத்துக்கும் எண்ணெ புண் :-

ஒரு படி எண்ணைக்கு மருந்து அவுரியிலே அரைச்சது, கையாந்தகரை அரைச்சது வகை, கடு விளங்காய் மதியாரி வெள்ளைப் பண்டு பலம், க விழுது வசம்பு பலம்.வ, அரைச்ச விழுதும் எண்ணை கொதிச்சு வாற பக்குவத்திலே இந்த நாலுகை விழுதம் போட்டு கருகு திறந்திலும் காய்ச்சி இறக்கிக் கொண்டு வடிக் கட்டி வைத்த நாலு நாளைக்கு ஒரு கால முழுகி வரவும். பிளிசந் தீரும். பத்தியம் கார்ப்.பு, புளிப்பு தவிர்க்கவும்.

கிரந்தி மேல் விசிறினத்துக்கு மருந்து : பறங்கிப் பட்டைச் சூரணம் :-

திப்பிலி பலம்.வ, திப்பிலி மூலம் பலம்.வ சுக்கு பலம்.வ, மிளகு பலம்.வ ஓமம் பலம்.வ, வாய் விளங்கம் பலம்.வ சீரகம் கொடிசைப் பாலை, கொடுவேலி சங்க வேர், சிவனார்காய், நிலாவாரை, நிலக் குமிள், சொர்த்தைக் கிழா; நீர்ப்புங்கு, வெள்ளறுகு, செருப்படை, கரிசலாங்கண்ணி, கொட்டைக் கரந்தை, குப்பமேனி, இவைகள் வகைக்கு பலம் கூட்டிச் சாதிக்காய் விராகனிடை.க, சாபத்திரி விராகனிடை.க இவைகள் கூட்டி வஸ்திர காயம் பண்ணி ஒரு பொழுதுக்கு இரண்டு விராகனிடை மத்திய வெந்நீரில் கொள்ளவும். பத்தியம் பசுவின் பால் பசுவின் நெய், சிவரைப் பருப்பு, முருங்கையிலைக் கறி கோழி, வெள்ளாட்டு உப்புக் கண்டம், மிளகு, உப்பு இவை முதலானது கூட்டவும். கடுச்சு, புளிப்ப வெந்தயம் பெருங்காயம், கடுகு, புகையிலை இவை முதலானது விட்டு விடவும்.

உப்பிசம், இரைப்புக்கு மருந்து : -

முருங்கைப் பட்டை, எருக்கம் வேர் பட்டை, கொடுவேலிப் பட்டை வேலிப் பட்டை இந் நாலும் ஒரு வள கூழி ஒரு படி கன்னீரில் போட்டு நாலு திப்பிலி

முடிஞ்சி போட்டுச் காய்ச்சி திப்பிலியை அரைத்துக் கலந்து கொடுக்கவும்.

25.5.63.

<u>நேத்திர வாயுவுக்கு எண்ணெ:-</u>

நல்லெண்ணெ விளக்கெண்ணெ பசுவின் நெய் வகை ஒவ்வொரு படி கலந்து பொன்னாங் கண்ணி, கரிசலாங் கண்ணி, முசுமுசுக்கை வகை ஒவ்வொரு படி கலந்து, புளியிலை கசற இரண்டு துட்டிடை விட்டு எநாமாக் குழப்பி அதிலே இரண்டு பலம், மிளகு, சதுக்கிப் போட்டு ஊரியப் புடம் பண்ணி ஒரு நாள் வேலவச்சி பிறகு முழுக ஒரு நாள் விட்டு ஒரு நாளைக்கு முழுகவும். இதுக்குப் பத்தியம் பருப்புக் கட்டவும்.

<u>நீர்க் கட்டுக்கு:-</u>

முடக் கொத்தான் இலை எலுமிச்சங் காயளவு அரைத்து இதக்குப் பசுவின் வெண்ணெ சமன் கூட்டி ஒரு பணவிடை வெண்காரம் பொரிச்சுப் போட்டுக் கட்டிக் கொடுக்கவும்.

<u>நீரழிவுக்கு:-</u>

நீர் முள்ளி விரை இரண்டு காசிடை பொடி செய்து மூன்று நாள் தேனில் கொள்ள வும். பிறகு ஆவாரம் பூ மொட்டுப் பன்னாய் பருதக்கு பூ உலத்தி வஸ்திர காயம் பண்ணி அரைக்கால் படி மூனும் கால் படி சாதுக் பச்சரிசி மாவும் மாகாணி நல்லெண்ணெ வார்த்துப் பிசைந்து நல்ல வெல்லம் கூட்டி சாப்பிடவும்.

<u>குழந்தை வண்டு தின்ன பேருக்கு மருந்து:-</u>

இது மந்திரம். வேறு முறை. விடப்பட்டது.

<u>நீர்க் கட்டு கல்லு தெறிக்கு:-</u>

தண்ணி முட்டான் கிழங்கு மேல் தோல் போக்கிப் போட்டு பசுவின் பாலிலே வேக வைத்து அரைத்து பசுவின் வெண்ணெயில் குழப்பி முழுங்க கல்லு நைந்து விழும். செருப் படைச் சாறு உறக்கு அதில் பல்கறை பொடி செய்து போட்டு மூன்று நாள் குடிக்க கல் நைந்து விழும்.

<u>நீரழிவுக்கு:-</u>

நீர் முள்ளி விரை இரண்டு காசிடை பொடி செய்து மூன்று நாள் தேனில் கொள்ள வும். பிறகு ஆவாரம் பூ மொட்டுப் ப வாய் பதக்குப் பூ உலத்தி வஸ்திர காயம் பண்ணி அரைக்கால் படி பச்சரிசி மாவு மாகாணி நல்லெண்ணெ வார்த்து பிசைந்து நல்ல வெல் லம் போட்டுக் கட்டிக் கொண்டு சாப்பிடவும். நீரழிவுக்கு தீரும்.

<u>மண்டை நோவுக்கு:-</u>

சதுக்கிராப் பழம் கொண்டு வந்து மூக்கில் நசியம் பண்ணத் தீரும். அழுக்கிறுப் பட்டையை மூலைப் பாலில் நருக்கி நசியம் பண்ணத் தீரும். இப்படி மூன்று நாள் பண்ணவும் நிற்கும்.

<u>தேத்தாம் விரை:-</u>

தேத்தாம் பழம் நிழலுலத்தா யுலத்தி பொடி செய்து நெய்யுடன் சாரித்துக் கண்ணிலிடப் ப மாறும். தேனிலிடக் கண் வியாதி தீரும். புளியுடன், மோருடன் குடிக்கப் பெருவயிறு தீரும். பாலுடன் குடிக்க கீரைப் புழு விழும். சோமூத்திரத்தில் குடிக்க பதி னெட்டு குட்டமும் தீரும். வெள்ளாட்டுக் கோமூத்திரத்தில் வெள்ளாட்டுப் புழுக்கை வள்ளிக் கிழங்கு முந்திரைக் கொளுஞ்சு சீரகம், நல்ல வெல்லம், பொடுதலை, வேப்பிலை, வெள்ளீயம் பற்பம் புன்னும் மதாசகைசக் கொடுக்கத் தீரும்.

பிரண்டை விரை கொண்டு வந்து அரைச்சு பத்துப் போடத் தீரும். கன்ன சிலந்தி, கண்டை கெந்தகம் அரைத்துக் கொடுக்கத் தீரும். நீர்க் கட்டுக்குப் பத்து வத்களிதம் புரட்டீது விறளி முள்ளங்கி விரை தேன் பொடுதலை வேப்பயிலை வெள்ளீயம்

----இவைகளை

வெள்ளை வி

வெள்ளை விழுதத்துக்கு மருந்து:-

வெள்ளருகு இலைச் சாறு படி, அதிமதுரம் பலம்.4, பறங்கிப் பட்டை பலம்.4, அக்கலாக் காரம் பலம்.க இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி வெள்ளறுகுச் சாத்திலே போட்டு பசுவின் நெய் படி.க, பசுவின் பால் படி.க இது வெல்லாம் கூடக் கலந்து கொண்டு அடுப்பிலே வைத்து எரியிட்டு பொன்னிறமான வாறே இறக்கி வைத்துக் கொண்டு காலமே ஒரு நேரம் ஒரு கரண்டி கொடுக்கவும். நெய் பொன்னிறம் வரச்சே நல்ல பாலைப் பூ போட்டு இறக்கவும். தீராத உஷ்ண பிரமியம் போம். வெள்ளை நிற்கும். உடம்பு கனுவு பறக்கும். இது கைகண்டது. முறிய பத்தியம் உப்பு, புளி விடவும்.

திரிலோக்கி சிந்தாமணி:-

ரசம் விராகனிடை.ந, தாளம் விராகனிடை.ந, நேர்வாளம் விராகனிடை.ந கெந்தகம் விராகனிடை.ந, சுக்கு விராகனிடை.ந, திப்பிலி விராகனிடை.ந, நெல்லிக்காய் இது சமன் கூட்டி கரிசிலாங் கண்ணிச் சாத்தில் பதினேரு நாள் அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி வைக்கவும். இதுக்கு அனுபானம் நெல்லிக்காய்ச் சாத்திலிட பத்து நாள் கொள்ள மூல வியாதி தீரும். எருமைத் தயிரில் மூன்று நாள் கொள்ள உஷ்ணம் போம். எலுமிச்சம் பழச் சாத்தில் மூன்று நாள் கொள்ள நடுக்கந் தீரும். முன்னிக்காய் கூட்டி மல்லி, குயிம் தீரும். வேப்பிலை ரசத்திலே மூன்று நாள் கொள்ள குளிர் காச்சல் தீரும். சாராயமாவது காடியாவது உரைத்துக் கண்ணிலிட சன்னி வாதம் தீரும். தன் மூத்திரத்தில் ஐந்து நாள் கொள்ள சகல கழிச்சல் தீரும். இஞ்சி சாறு, சர்க்கரையும் கூட்டி இருபத்து நாலு நாள் கொள்ள எழு வகை குன்மமுந் தீரும். வெள்ளாட்டுப் பாலும் சர்க்கரையும் எழு நாள் கொள்ள சுக்கிலப் பிரமியந் தீரும். சர்க்கரையில் மூன்று நாள், நாலு நாள், எழு நாள் கொள்ள பாண்டு ரோகம் காமாலை, சோகை தீரும். தேத்தான் கொட்டை ஒன்று, தக்காளி பழம் சாத்தில் உரைத்து ந நாள் புச வீக்கமும் தீரும். எருக்கம் பூ மூன்று கடுக்காய் யத்தனை வெல்லமும் கூட்டி வசளுள் கொள்ள வெகு மூத்திரம் நிற்கும். கோரோசனை அம்மான் பச்சரிசியும் கூட்டி திலதமிட்ட முக வசீகரம், வெத்திலைச் சாத்திலே ய நாள் கொள்ள ஈளை இருமல் தீரும். முலைப் பாலிலுரைத்து கண்ணிலிட ப மாறும். கரி ஊமத்தம் சாத்தில் மூன்று நாள் நசியம் பண்ண முயல் வலிப்பு தீரும். கழுதைப் பாலும் சர்க்கரையும் ய நாள் கொள்ள பயித்தியம் தீரும். இளநீரில் கொள்ள விரோசனம். வெந்நீரில் கொள்ள வயறு கழிச்சல் நிற்கும். தேனில் மூன்று நாள் கொள்ள உப்பிசம் தீரும். இஞ்சி சாத்திலுரைத்து கண்ணிலிட குளிர் காச்சல் தீரும். தேனில் 4 நாள் கொள்ள உஷ்ண சுரம் தீரும். கரிசிலாங் கண்ணிச் சாறும் சர்க்கரையும் 4 நாள் கொள்ள குன்மந் தீரும். சீரகம் அகத்தி விரையும் சூரணம் பண்ணி மூன்று நாள் கொள்ள தாப சுரம் தீரும். ஊமத்தஞ் சாத்தில் மூன்று நாள் கொள்ள நாலா மாறல் தீரும். சாதிக்காயில் 4 நாள் கொள்ள சீக் கிருணி தீரும். எருமை மோரில் கொள்ள எடுக்கும். யென்னுத்தனை கசாயத்தில் எழு நாள் கண்ணிலிட படலந் தீரும். குருவே துணை.

வெள்ளை விழுதிறதுக்கு:-

வெள்ளெருக்க இலைச் சாறு படி.க, அதிமதுரம் பலம்.4, பறங்கிப் பட்டை பலம்.4, சிக்கலா காரம் பலம்.க இது வெல்லாம் இடிச்சு சூரணம் பண்ணி வெள்ளருகு சாத்தில் போட்டு பசு வெண்ணெ படி.க இது வெல்லாம் கூடக் கலந்து அடுப்பில் வைத்து பசுவின் பால் படி.க எரியிட்டு பொன்னிறமாக வரச்சே நல்ல மலைப்பூ சீனிச் சேர் போட்டு இறக்கவும். ஒரு நேரம் ஒரு கரண்டி சாப்பிடவும். தீராத உஷ்ணம் பிரமியம் போம். உப்பு, புளி தவிர்க்கவும்.

புண்ணுக்கு:- பல்லாகரை பற்பம் பனமடை ஒட்டடை அதை ஒரு படி செகக்கி

கொண்டு சட்டியிட்டு வறுத்துக் கொண்டு நெருப்புள் வைத்து மோர் படி வார்த்து பதமாக போட்டு தெளிவிட்டு இறுத்துக் கொண்டு கொடுக்கிறது. இப்படி ஐந்து வேளை கொடுக்கிறது. உப்பு, புளி தவிர்க்கவும்.

புளவுறவுக்கு, குத்துப் பளவுறவுக்கு:-

மங்கரை பட்டை, பொரிச்ச பட்டை, நாரிஞ்சா பட்டை, எரிசிங்கி பட்டை, திப்பி, செம்பிரட்டை, பல்ல படுவ கெழுகு, சித்தி, அரத்தை, பேரரத்தை, மிளகு, வல்ல மொறுக்கு, திப்பிலி, மோடி, வெள்ளைப் பல்டு, கஸ்தூரி மஞ்சள், கருக் கருஞ்சீரகம், பல்ல லத்த அரச்ச உருண்டை பண்ணி சட்டி காய வைத்து பொங்க வத்தி கொடுக்கிறது. ஐந்து வேளை கொடுக்கிறது. உப்பு, புளி தவிர்க்கவும்.

சன்னி பதிழற்றுக்கு:-

நெக்கானி தழை ஒரு கூடைக்கு கொள் நன்று படி வேகப் போட்டு எடுத்துக் கொண்டு தலே எல்லாம் எடுத்துப் போட்டு பாகு பதம் இறக்கி கொண்டு கொள்ளை உலர விட்டு உலர்ந்தவுடனே சூரணம் பண்ணிக் கொண்டு சுடாக தண்ணீரில் கொடுக்கவும்.

தோஷந்துக்கு குண்டாவிழ்தம்:-

அக்கலாக் காரம் விராகனிடை.க, கோஷ்டம் விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை, கடுக்கச்சிக் காய், புத்திர சிரை விராகனிடை.ரு, மாவிலங்கு, ருத்திராட்சம், கலக் கொம்பு, குங்குமப்பூ பணவிடை.ரு, கோரோசனை பணவிடை.ரு, சுக்கு விராகனிடை.க, அரத்தை விராகனிடை.க, பொன்று முத்துப் பவளம், சீரம் விராகனிடை ரு, மச்சிக்காய் விராகனிடை.க, மாவிலிங்கப் பட்டை, முருங்கைப் பட்டை, நொச்சிப் பட்டை கூட்டிக் கொண்டு முலைப் பாலில் பண்ணவும்.

கல்லில் தொன்னூறு குத்துக்கு:-

கடுக்காய், வசம்பு, கோஷ்டம், திப்பிலி, மிளகு, தானிக்காய், பருப்பு, சங்கு நாபி, மஞ்சிலே தண்ணிலொக்க கூட்டி வெள்ளாட்டு பால் வார்த்து அரைத்து உருண்டை செய்து தண்ணீரிலரைத்துக் கண்ணிலிடவும்.

சத்தி இருமலுக்கு, இருளிக்கு:-

விழுது கொண்டு வந்து இடிச்சு குட்டி கட்டி பிளிஞ்சி கொண்டு அடுப்பில் வைத்து காய்ச்சி கண்ட விட்டு பனைவெல்லம் போட்டு நாலு வெங்காயம் கொண்டு வந்து அதை கிழிச்சு அதில் ஒரு விராகனிடை அபினி வைத்து காய்ச்சி அதிலே போட்டு லேகமாக்கி கிண்டி வைத்துக் கொண்டு வேளைக்கு சுண்டைக் காய் பிரமாணம் கொள்ளவும் இருமல் தீரும்.

குத்துப் பளவுறவு:-

உச்சித் தகரை கொணர்ந்து சத்தப்பு அரைச்சு மேலுக்குப் பசி விளக்கில் காய்ச்சு கருக விட்டு உப்பை தட்டிப் போட்டு இப்படி ஏழு தரம் பூச்சி புடம் போட்டு எடுத்துக் கொண்டு பட்டையைத் தட்டி அரைச்சு உருண்டை பண்ணிக் கொண்டு சுண்டைக்காய் பிரமாணம் கொடுக்கவும். குத்து பளவுறவை தீரும். வென்னீர் தண்ணீர் கொடுக்கவும்.

வெகு மூத்திரத்துக்கு:-

ஒரு மண்ணு புண்ணுக்கு எட்டிக் கொம்டை.உ ஆக இரண்டும் ஒன்று இடிச்சு வைத்துக் கொண்டு இரு கழஞ்சு கொள்ள நாற்பது நாள் சாப்பிடவும் தீரும்.

மலட்டுப் புழு விழ:-

கண்ணேவு கிழங்கு, பறங்கிப் பட்டை இரண்டும் ஒன்றாகத் திருகி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி காலம்பற ஒரு கரண்டி கொள்ளவும். நாற்பத்தெட்டு நாள் கொள்ளவும். மலட்டு புழு விழும்.

மூலப் பவுத்திரத்துக்கு:-

சதிரக் கள்ளிக் கொழுந்து ஒரு மண்ணுடன் ஒரு மளைப் குப்பை வைத்து சட்டியிலிட்டு அடுப்பு மேல் வைத்து அதில் பறங்கிப் பட்டை சேர் ஒன்று கோதம்பை மா மாவு அரை மணம் ஆக இரண்டு பிட்டு வைத்து எடுத்துக் கொண்டு உள்ளுக்கு உச்சி கருண்டை சாப்பிடவும். நாற்பத்தெட்டு நாள் சாப்பிடவும்.

(*மேல் ளஉஅ, ளஉக ஒலைகள் தொடக்கம் முடிவு சரியில்லாமையின் விடப்பட்டது)

பிள்ளை இளைப்பு:-

பித்தம், சயம், உச்சிதம், தள்ளும் பித்தம் கூட தீரும்.

திப்பிலி விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.ய, யேலம் விராகனிடை.க இதையெல்லாம் வறுப்பாய் வறுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு இஞ்சி கால் சேர், சீலி வெள்ளை விட்டு இடித்துப் பிழிந்து சுண்ணம்பு தள்ளி பசுவின் பால் அந்த அளவு விட்டு முன் பொடி மூன்று விராகனிடையும் போட்டு கலந்து கொடுக்கவும். இப்படிக் காலமே காலமே வேளை கொடுக்கவும். சாந்திரமும் கொடுக்கலாம். கை கண்டது.

ஏரி_அஜீமத்துக்கு_சூரணம்:-

திரிகடுகு அதிமதுரம், சீரகம், நெல்லிப் பொரி இவ்வகை சமமாக வாங்கி வந்து பொடி செய்து வஸ்திர காயம் செய்து தேனில் விராகனிடை பிரமாணம் கொள்ளவும். கை கண்டது.

தாது புஷ்டிக்குச் சூரணம்:-

அமுக்கிறவு கிழங்கு பச்சையாய்க் கொண்டு வந்து வட்டமாய் அறுத்துப் போட்டு இடித்துச் சூரணம் பண்ணி பாலிலே போட்டு வேக வைத்து வைத்துக் கொள்ளவும். முருங்கை விரிஞ்சி, நிலப்பனைக் கிழங்கு வகை சூரணம் செய்து வகைக்கு பலம்.உ இவை யெல்லாம் கலந்து வைத்துக் கொண்டு காய்ச்சின பாலில் விராகனிடை சூரணம் போட்டு அந்தி, சந்தி கொள்ளவும். இப்படி எ நாள் கொள்ளவும். பகலுக்கு பாலும் சோறும், ராத்திரிக்கு நெய்யும் சோறும் சாப்பிடவும். கை கண்டது.

****

முற்றும்

க.க:26.5.63.

265